2005 பிப்ரவரி 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 26, திரு. டி. மணி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

26—

விற்பனை வரியை ரத்து செய்தல்

***59910—திரு. டி. மணி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட தேன் உற்பத்தியாளர்களிடமிருந்து தேன் கொள்முதல் செய்யும் சிறு வியாபாரிகள் அரசுக்கு விற்பனை வரி செலுத்துவதை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன் உற்பத்தியாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் விற்பனைத் தொகை வரி விதிப்பிற்கு குறைவாக உள்ளபடியால், வரி ஏதும் செலுத்தவுமில்லை; வரி வசூலிக்கப்படவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

(துணை வினா இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 27, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.*

27—

சுற்றுலாத் தலம்

***39572—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன்மலை மற்றும் பெரியாறு நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சத்யமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2005 பிப்ரவரி 3

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன்மலை மற்றும் பெரியாறு நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன்மலையில் பெரியாறு நீர்வீழ்ச்சி உள்ளது. அங்கு தினந்தோறும் பயணிகள் நிறைய பேர் வந்து செல்கிறார்கள். அந்த இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து, தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தந்தால் மேலும் பயணிகள் எண்ணிக்கை அதிகமாகும்; அரசுக்கும் வருமானம் அதிகம் கிடைக்கும். சுற்றுலாத் தலம் அமைப்பதற்கு என்ன தகுதி வேண்டும், மத்திய அரசின் பங்கு என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டும். எனவே, அந்த இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க, அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் தலங்களுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில்கொண்டு, கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. கல்வராயன்மலையில் பல நீர்வீழ்ச்சிகள் உள்ளன. அவற்றில் மேகம், பெரியாறு நீர்வீழ்ச்சிகள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இந்நீர்வீழ்ச்சி கரியாரிலூரிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவிலும், வெள்ளிமலையிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலும், கரியாரிலூரிலிருந்து குறத்திக்குன்றம் வழியாக சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இந்நீர்வீழ்ச்சியில் சுமார் 70 அடி உயரத்திலிருந்து தண்ணீர் கொட்டுகிறது. இதுவே இதன் சிறப்பாகும். கச்சிராப்பாளையத்திலிருந்து, கரியாலூர் வரும் வழியில் பிரதான சாலையில் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. மழைக் காலத்தில் மட்டும் நீர் அருவியாகக் கொட்டும். தற்போது, வனத் துறையினர், சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்காக தடுப்புக் கம்பிகளை அமைத்துள்ளனர். அருவி மிக உயரம் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 பிப்ரவரி 3]

முற்பகல் 10-40

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கழிப்பிடம் அமைத்துத் தருவதற்கும், உடை மாற்றுவதற்கு இடம் அமைத்துத் தருவதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

28—

புதிய குழாய்கள் அமைத்தல்

***19936—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதி, நடுவக்குறிச்சி ஊராட்சி, பர்கிட் மாநகரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து வரும் பழுதடைந்த தண்ணீர்க் குழாய்களை மாற்றி புதிய குழாய்களை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை தொகுதி, நடுவக்குறிச்சி ஊராட்சி, பர்கிட் மாநகரில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி தற்போது அமைக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சி கிணற்றிலிருந்து உந்தப்படும் குடிநீர், மேற்படி நீர் சேகரிக்கும் தொட்டியில் சேகரிக்கப்பட்டு தனித் தனி மின் இறைப்பான்கள் மூலமாக பர்கிட் மாநகரில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும், பாளையம் செட்டிக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் நீர்